<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC. No. 28 / 2016</u>

PW : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. திலகம் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் 12 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>12.11.2024</u>

<u>முதல் விசாரணை</u>

நான் கடந்த 31.12.2017 ம் தேதி அரசு பகுப்பாய்வாளர் மருந்தாய்வகம் சென்னையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். 19.09.2015 ம் தேதியில் நான் பணியில் இருந்போது மாதிரி எண். 58/RS/ TVR/15 அன்று மாதிரியின் பெயர் Nutrihale என்ற மாதிரி ஆய்விற்கு தரப்பட்டது. அதன் பேட்ச் எண். SFN S019 ஐ தயாரிப்பு தேதி ஜூன் 2015, காலாவதி தேதி நவம்பர் 2016, தயாரிப்பு நிறுவனம் SYNOKEM Pharmacuticals limited Utharkant அந்த மாதிரியில் உள்ள மூலகூறுகளை ஆய்வு செய்ததில் அதிலுள்ள மூலக்கூறுகளில் ஒன்றான LEVO CARNITINE 0.27 மிலி கிராம் மட்டுமே இருந்தது. ஆனால்

இருக்க வேண்டியது 500 மிலி கிராம் ஆகும். எனவே இது தரமற்றது என்று பகுப்பாய்வு அறிக்கை எண். 04266-D - 2015-2016 02.02.2016 அன்று அனுப்பபட்டது. நான் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

என்னை பகுப்பாய்வளராக மேற்படி மாநில அரசு பகுப்பாய்வு அலுவலத்தில் நியமனம் செய்து நியமித்த அரசு உத்தரவை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய கல்வி தகுதி இளநிலை மருந்தியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். மாதிரியை நான் ஆய்வு கூடத்தில் பெறப்பட்ட தேதி 19.09.2015 ம் தேதி அந்த மாதிரிகள் போஸ்டலில் வந்தது. அந்த மாதிரிகள் குளிர்சாதன பெட்டியில் வைத்து வந்ததாக தெரியவில்லை. அந்த மாதிரிகளை நான் திறந்தபோது அப்போது உள்ள தட்பவெப்பநிலை குறித்து குறிப்பிடவில்லை. அந்த மாதிரிகளை எந்த மாதிரி சூழ்நிலையில் வைத்தேன் என்று சொல்லவில்லை என்றால் வைப்பறையில் வைத்தேன். நான் மாதிரிகளை இரண்டு மாத காலத்திற்குள் முடிக்கமுடியவில்லை ஏனென்றால் அதற்கு முன்பு வரிசைகிரமத்தில் ஏற்கனவே மாதிரிகள் இருந்ததால் அதை பகுப்பாய்வு செய்துவிட்டு வரிசைப்படி பகுப்பாய்வு செய்ததால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்கமுடியவில்லை. இரண்டு மாத காலத்திற்கு

மிகைப்பட்டால் பகுப்பாய்வு செய்தவற்கு அரசிடம் கால நீட்டிப்பு வாங்க வேண்டும் என்று சொன்னால் நான் பகுப்பாய்வு செய்த தேதியில் கால நீட்டிப்பு தேவையில்லை. மேலும் அந்த நேரத்தில் விதி அமலுக்கு வரவில்லை. எனது அறிக்கையுடன் இரண்டாவது பக்கத்தில் பகுப்பாய்வு செய்த விதத்தை பற்றி குறிப்பு எழுதியுள்ளேன். Proproprietary medicine எப்படி பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்று புத்தம் ஏதும் இல்லை ஏனென்றால் இதன் மூலக்கூறு கொடுத்துள்ளால் USP form அடிப்படையில் பகுப்பாய்வு செய்தேன். மேற்படி மருந்தானது தட்பவெப்பநிலை சரியாக பராமரிக்கவில்லை என்றால் சுலபமாக கெட்டுவிடும். எனது பகுப்பாய்வு முறை சட்டத்திற்கு உட்பட்டு செய்யப்படவில்லை என்று பகுப்பாய்வு முறை தவறு என்றும் சொன்னால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2024.11.14 15:39:12 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.